ISSN:2582-9599



# உதயணகுமார காவியத்தில் வெளிப்படும் வாழ்வியல் கூறுகள்

**முனைவர் ஏ.எம்.ஜெ. ரஃபீக் பாஷா**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை**
**சி. அப்துல் ஹக்கீம் கல்லூரி (தன்னாட்சி) , மேல்விசாரம்.**

.

**ஆய்வுச்சுருக்கம்**

சங்ககால இலக்கியங்கள் தமிழரின் பெட்டமாகவும்;> காலக்கண்ணாடியாகவும் விளங்குகின்றன. அறம்> பொருள்> இன்பம்> வீடு எனும் நான்கு உறுதிப்பொருள்களைக் கொண்ட காப்பியங்கள் மனித வாழ்க்கையைப் பற்றி எடுத்துரைக்கின்றன. ஐஞ்சிறுகாப்பியங்களுள் ஒன்றான உதயணகுமார காவியம் ஆய்வுக்களமாக அமைந்துள்ளது. உதயணகுமாரன் அரச வாழ்வை மேற்கொள்கின்றான். நான்கு தேவியர்களை மணந்து கொள்கின்றான். பல பேறுகளை அடையும் அவன் பகையரசர்களானாலும் நட்புறவுக் கொள்கின்றான். பன்மணம் கொள்வது> பரத்தையருடன் தொடர்பு என அரச வாழ்வு முதல் துறவு வரை உதயணனகுமாரன் வாழ்வியல் கூறுகளை எடுத்துரைக்கும் விதமாக இந்த ஆய்வு அமைகிறது.

**திறவுச் சொற்கள்**

களவு - உள்ளத்தைக் கவர்தல்> பன்மணம் - பலதார மணம்> பரத்தை – கணிகையர்> சேனை - அரசனின் படை> சவரர் - குறவர்> புளிஞர் - வேடர்.

**முன்னுரை**

தமிழ்மொழி பரந்துபட்ட இலக்கியப் பரப்பைக் கொண்டது. தமிழ் இலக்கியங்களுக்கு மணிமுடியாகத் திகழ்பவை காப்பியங்கள். பண்டைத் தமிழ்க் காப்பியங்களை ஐம்பெருங்காப்பியங்கள் என்றும்

ஐஞ்சிறுகாப்பியங்கள் என்றும் பாகுபடுத்துவர். ஐஞ்சிறுகாப்பியங்களுள் தனித்து வைத்து எண்ணப்படும் தகைமை வாய்ந்தது உதயணகுமாரன் எனும் அரசனது வரலாற்றினைக் கூறும் காப்பியமாகிய உதயணகுமார காவியம். உதயணகுமாரனின் வரலாற்றின்வழி இக்காப்பியத்தில் இடம்பெறும் வாழ்வியல் கூறுகள் குறித்து ஆராய முற்படுகிறது இக்கட்டுரை.

**கதைக்களம்**

பாரத கண்டத்தில் வத்தவ நாட்டின் தலைநகரம் கௌசாம்பி என்பதாகும். இதனை சதானிக மன்னன் ஆண்டு வந்தான். மிருகாபதி இவனது மனைவியாவாள். இவள் கருவுற்றிருந்த போது, அண்ட பேரண்டபுள் எனும் பறவை மிருகாபதியை அவளது தந்தை சேடக முனிவர் வசிக்கும் காட்டிலிட்டுச் சென்றது. ஆண் மகவுப் பிறக்கவே, நீராடச் சென்ற சேடகன் பார்த்து தன்னுடன் தவப்பள்ளிக்கு மிருகாபதியை அழைத்துச் செல்கிறான். அக்குழந்தை சூரிய உதயத்தில் பிறந்ததால் உதயணன் எனப் பெயரிடலாகிறது. பிரமசுந்தர முனிவரின் மகன் யூகி என்பவனும் உதயணனும் நட்புக் கொண்டு கலைகள் பல கற்றனர். இளமைப்பருவத்தை அடைந்த உதயணனுக்கு சுந்தர முனிவரின் அருளால் தெய்வ யாழும் தெய்வ யானையும் கிடைத்தது. உதயணின் தாய்மாமன் விக்கிரமனுக்கு குழந்தைப்பேறு இல்லாததால் நாட்டை உதயணனிடம் ஒப்படைத்து விட்டு துறவு பூண்டான். சாதனிக மன்னனைப் பிரிந்த மிருகாபதி மீண்டும் இணைவதில் பிங்கலன், கடகன் என்ற மக்களை ஈன்றெடுத்தாள். உதயணன் சேதி நாட்டை சிறப்பாக ஆண்டதோடு யூகி உடன் இணைந்து அண்மை நாடுகளை போரில் வென்றான். தன் தந்தையின் வத்தவ நாட்டையும் அரசாண்டான்.

பிரச்சோதனன், அவந்தி நாட்டில் உஞ்சை மாநகரத்தில் மன்னர்களை வெற்றி கொண்டு புகழுடன் ஆண்டான். திறை செலுத்தாதவர்களின் பட்டியலில் உதயணன் பெயர் இருக்கவே விசாரித்தான். உதயண குமாரன் ஆண்மை, கல்வி, களிற்றை அடக்கும் ஆற்றல், கோடவதி யாழ் மற்றும் தெய்வ யானை பெற்ற சிறப்புகளை பிரச்சோதனன் அறிந்தான். உதயணனை சிறைப்படுத்துகின்றான். இதையறிந்த யூகி, தன் தலைவனை சிறைப்படுத்தியவனின் மகளையே அவனுக்கு திருமணம் செய்ய வைப்பேன் என உறுதிக்கொள்கின்றான். தான் இறந்ததாக ஒரு

செய்தியை பரவச் செய்கிறான். யானைக்கு புகையூட்டி மதம் பிடிக்கச் செய்யவே, நாடு சேதமடைகிறது. அமைச்சர்கள் உதயணனை விடுதலை செய்து மக்களைக் காப்பாற்ற பிரச்சோதனனிடம் முறையிட்டனர். விடுதலையான உதயணனின் யாழிசையைக் கேட்ட யானை அவனிடத்தில் மயங்கியது. யூகியின் உதவியால் பிரச்சோதனனின் மகளான வாசவதத்தையை உதயணன் மணந்துக் கொள்கின்றான். மகத நாட்டு 'இராசகிரியம்' நகரில் காமன் கோயில் விழாவில் பதுமாபதியை காணும் உதயணன் காதலித்து திருமணம் செய்து கொள்கின்றான். கோசல நாட்டு மன்னன் மகள் மானனீகை பந்தாடும் அழகைக் கண்ட உதயணன் தன் மனதைப் பறிகொடுத்து மணந்து கொள்கின்றான். விரிசிகை என்பவள் மீது காமவேட்கைக் கொண்டு அவளையும் மணந்துக் கொண்டான். இனிதே வாழ்ந்து வந்த வேளையில் வாசவதத்தை, நரவாகணன் என்ற ஒரு ஆண் மகவைப் பெற்றெடுத்தாள். அவன் பல கலைகளைப் பயில்கின்றான். சீர்வளர்ச் செல்வனாக வளர்ந்தான். உதயணன் தன் அரசாட்சியை நரவாகணனிடம் ஒப்படைத்து விட்டு துறவை மேற்கொள்கின்றான். அவனுடன் அவனது நான்கு தேவியர்களும் அமைச்சர்களும் துறவை மேற்கொண்டனர்.

**கதைமாந்தர்கள்**

ஒரு கதைக்கு கதைமாந்தர்கள் இன்றியமையாதவர்களாவர். அவ்வகையில் உதயண குமார காவியத்தில் இடம்பெறும் மாந்தர்கள்வழி அக்காவியத்தின் வாழ்வியல் உண்மைகளை காண முடிகிறது. முதன்மை மாந்தர்களைக் கொண்டும் துணைமை மாந்தர்களைக் கொண்டும் இக்காப்பியம் படைக்கபட்டுள்ளது.

**உதயண குமாரன்**

காப்பியத் தலைவனாக திகழும் உதயணன், சதானிகன் - மிருகாபதியினரின் புதல்வன். இவன் அழகு நிறைந்தவனாகவும் அறிவில் சிறந்தவனாகவும் திகழ்ந்தான். தெய்வ யாழையும் தெய்வ யானையையும் பெற்றவன். கல்வி, போர் எனப் பல்லாற்றானும் ஒப்பற்று விளங்கியவன். யூகி என்பவனோடு நட்புக் கொண்டு பல கலைகளைக் கற்றவன். யாழ் மற்றும் வில் வித்தையில் வல்லவன். யானையை அடக்கும் ஆற்றலுடையவனான உதயணன்,

**"அகமுக ஆளுமை பெற்றவன். தெய்வ அம்சம் பெற்றவன். எளிய**

**உணர்வுகள் கொண்ட விலங்குகளையும் நேசிக்கும் சாதாரண மனிதனாக கலையாற்றல், வீரம், பயணம், முடிவெடுத்தல் போன்றவற்றில் சிறந்தவனாகப் பல சாதியினரையும் தொடர்புக் கொண்டவனாகக் கவிஞரால் படைக்கப்பட்டுள்ளான்."1**

என்பது உணரலாகிறது. வாசவதத்தையை மணந்து இனிதாக வாழும் உதயணன் பதுமாபதியை மணக்கின்றான். பந்தாட்டம் மீது ஆர்வங்கொண்டவன், மானனீகை பந்தாடும் அழகைக் கண்டு மயங்குகின்றான். அவளை மணப்பதோடு விரிசிகை என்பவளையும் மணந்து கொள்கின்றான். உதயணன்,

**"ஓர் ஒப்புயர்வற்ற உன்னதத் தலைவன் சகலகலா வல்லவன்**
**பந்தாட்டத்தை இரசிக்கும் பரம கலைஞன் பெண்களை கவர்வதிலும்**
**கவரப்படுவதிலும் சீவகனின் சகோதரன் என்று சொல்லும் வகையில்**
**நான்கு பெண்களிடம் தன்னைப் பிணைத்துக் கொள்கின்றான்.**
**அவர்களோடுகூடிமுயங்குவதிலும்,ஊடல்தீர்ப்பதிலும்தன்னிகரற்றுச்**
**சீவகனை போலவே விளங்குகின்றான்" 2**

என்பதன்வழி பல சிறப்புகள் பெற்றிருப்பதும் ஒரு நாயகனுக்குரிய அனைத்து இயல்புகளும் ஒருங்கே கொண்டிருப்பதும் போற்றுதலுக்குரியதாகும்.

**சதானிகன்**

பெருமைமிக்கது நாவலந்தீவு. அத்தீவில் பாரத கண்டம் உள்ள நாடு வத்தவ நாடு. இது கௌசாம்பியை தலைநகராகக் கொண்டிருந்தது. இங்கு குருகுலத்தில் பிறந்த அரசன் சதானிகன், மிருகாபதியை மணக்கின்றான். அவள் கருவுற்றிருந்த போது அவளை சரபப்புள் எனும் பறவை தூக்கி செல்லவே பிரிவால் வாடுகின்றான். சில காலங்களுக்குப் பின் மனைவியோடு சேர்ந்ததில் பிங்கலன், கடகன் எனும் இரு மகன்கள் பிறந்தனர். பல சிரமங்களை எய்தியவன்.

**வாசவதத்தை**

பிரச்சோதனின் மகள் வாசவதத்தை. அழகு நிறைந்தவள். உதயணின் முதல் மனைவியானவள். சிறந்த குணமும் கலைகளில் பயிற்சியும் கொண்டவள். யாழ், மாலைத்தொடுப்பது, சிற்ப வேலைகளில் மிகுந்த ஆர்வங்கொண்டவள். யாழினை உதயணனிடம் கற்றுக் கொள்ளும் வாசவதத்தை அவன்மீது காதல் கொள்கிறாள்.

ஆனால் அவளை மணக்க வேறு நாட்டைச் சேர்ந்த அரசர்கள் வருவதைக் கண்டு வருந்துகிறாள். சாங்கியத்தாயிடம் உதயணனை மணக்காது போனால் நான் இறந்து விடுவேன் என அரற்றுகிறாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர்த்துளிகள் முத்துக்கள் போன்று சிதறின. உதயணனை மணப்பேன் அல்லது இறப்பேன் என்பதன் மூலம் அவளது அன்பு வெளிப்படுகிறது.

**பதுமாபதி**

காசிராஜன், உதயையோடை தம்பதியரின் மகள் பதுமாபதி. இவளை தருசக அரசனின் தாய் வளர்க்கிறாள். வாசதத்தை போன்று தோற்றம் பெற்றவள். கல்வி கேள்விகளில் சிறந்தவளான இவளை பதுமை என்றும் பதுமாபதி என்றும் அழைக்கப்பட்டாள். காதல் ஓவியத்தைப் போன்றும் தத்துவ மகளுமான இவள் உதயணனின் இரண்டாவது பட்டத்தரசியானவள். அன்பு, பண்பு போன்ற குணங்களில் சிறந்தவள்.

**மானனீகை**

கோசல நாட்டு மன்னன் மகள் மானனீகை. வாசவதத்தை எனும் இயற்பெயர் கொண்டவள். பாஞ்சாலத்து மன்னன் கோசலன் அந்தப்புரத்திலிருந்து பல பெண்களை கவர்ந்தவர்களுள் இவளும் ஒருத்தியாவாள். வாசவதத்தையின் பணிப்பெண்ணானவள். இவள் பந்தாடும் அழகைக் கண்டு உதயணன் மயங்குகின்றான். திருமணமும் செய்து கொள்கின்றான். அரசனின் மகளாகப் பிறந்து, பணிப்பெண்ணாகி, காதலால் உதயணனின் மூன்றாவது அரசியாகிறாள்.

**விரிசிகை**

விரிசிகை, இராசரிஷியின் மகளாவாள். இளம்பருவத்தில் இவளை உதயணன் மாலை சூட்டி திருமணம் செய்துக் கொள்கின்றான். காட்டில்; மான்கள் விளையாடுகையில் மான்களோடு மானாக இருந்தவள். மயில்கள் தோகை விரித்தாட மயிலாகக் காட்சித் தந்தவள். அன்னங்களுக்கிடையில் அன்னமாக நடை பயின்றவள். அரசனின் மகளானாலும் ஒரு முனிவரிடமே வளர்ந்தாள். அன்பு, அமைதியின் மறு உருவமாக விரிசிகை திகழ்ந்தாள். உதயணனின் நான்காவது பட்டத்து தேவியானாள்.

**யூகி**

இவன் பிரமசுந்தர முனிவரின் மகன். உதயணின் பால்யகால நண்பன். கலைகள் பலவற்றை கற்ற நுட்பமான அறிவுடையவன். கல்வியில் சிறந்தவன். நண்பன் உதயணனுக்காக மாறுவேடம் பூண்டு பல பகுதிகளை வெல்ல காரணமாக இருந்தவன். சூழ்ச்சிகள் செய்வதில் வல்லவனானதால் இவன் இடனறிசூழ்ச்சி யூகி என உதயணனால் புகழப்படுகின்றான். இதனை,

> **“சூழ்ச்சியில் சிறந்த யூகி சாங்கியத்தாயை அழைத்து தான்**
> **இறந்ததுபோல ஓவியம் ஒன்றை வரைந்து உதயணனுக்கு…”** 3

எனும் வரிகள் விளக்குகின்றன. நாட்டை காக்க சாங்கியத்தாய், வாசவதத்தை போன்றோரை நாடியவன். நட்பிற்கான செயல்களுக்கு இவனுக்கு இணையாக வேறு யாரையும் ஒப்பிட முடியாது என்பது நோக்குதற்குரியது.

**பிரச்சோதனன்**

சிந்து நதியும் கங்கை நதியும் பாய்ந்து வளம் கொழிக்கும் நாடு அவந்தி நாடு. இதன் தலைநகரம் உஞ்சை. இதனை படை வளம் உடைய பிரச்சோதன மன்னன் ஆண்டு வந்தான். திறை செலுத்தாததால் உதயணனை சிறைப்படுத்தினான். பிரச்சோதனின் மகள் வாசவதத்தை. உதயணனின் ஆற்றலைக் கண்டு வியந்த பிரச்சோதனன், திறை செலுத்தியதாக ஓலையில் வரவு வைத்து விடுதலை செய்தான். பல

பரிசுகளை வழங்கினான். தன் மகள் வாசவதத்தையை உதயணனுக்கு மணம் முடித்து வைத்தான்.

**சாங்கியத்தாய்**

கோசம்பி நகரில் பார்ப்பன குலத்தைச் சார்ந்தவள். இயற்பெயர் அறியப்படவில்லை. திருமணத்திற்குப் பின்பு இவளது கணவன் இவளை விட்டு நீங்க, ஒழுக்கம் தவறுகிறாள். இதனால் யமுனை ஆற்றில் இவள் வீழ்த்த முயற்சிக்கையில் உதயண குமாரனால் காப்பாற்றப்பட்டாள். புனித யாத்திரைக்கு சென்று கங்கை, இமயமலையில் தங்கி நீராடி சமய விகற்பங்களை அறிகிறாள். வாசவதத்தையிடம் அன்பை செலுத்தும் இவள் அவளுக்கு செவிலித்தாயாகிறாள். உதயணனுக்கு பெருமளவு உதவியவள். இவள் சாங்கியத்தாய், செவிலித்தாய், சாங்கிய முதுமகள் என்றெல்லாம் அழைக்கப்படுகிறாள்.

**தகைமையும் அரசுரிமையும்**

மன்னராட்சியில் மன்னருக்குப்பின் வாரிசுக்கு ஆட்சி வழங்குதல் வழக்கம். ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் அவனுக்கு அந்த அரசாட்சியை ஏற்றுக்கொள்ள இயல்பாகவே அவனிடத்தில் தகுதிகள் நிறைந்திருப்பதே தகைமையுடைமை எனச் சொல்லப்படுகிறது. உதயணன் இயல்பாகவே அறிவுத்திறனையும் கலைத்திறனையும் கொண்டவன். அரச குலத்தில் பிறந்த அவனுக்கு,

> **“உரைமுடிவு காணான் இளமையோன் என்ற**
> **நரைமுது மக்கள் உவப்ப - நரைமுடித்து**
> **சொல்லால் முறைசெய்தான் சோழன். குலவிச்சை**
> **கல்லாமல் பாகம் படும்” 4**

எனும் பழமொழி நானூறு பாடல் வரிகளுக்கேற்ப திறம் வாய்ந்தவனாகக் காணப்படுகின்றான். உதயணனை தவப்பள்ளியில் விக்கிரமன் பார்க்கின்றான். விக்கிரமனுக்குப் பிள்ளைப்பேறு இல்லை. உதயணன் தன் தங்கை மிருகாபதியின் மகன் என்பதை அறிந்து தனது அரசுரிமையை உதயணனுக்கு வழங்குவதையும் அவன் ஆட்சிப்புரிவதையும்,

**"… … … … … … … …**
**மனனிறை நாட்டை யந்த**
**மருமகனுக் கீந்து போந்து**
**முனிவனம் புகுந்து மாமன்**
**முனிவனாய் நின்றா னன்றே" 5**

**"இளமையை இகந்து மிக்க**
**வினியநற் குமர னாகி**
**வளமையிற் செங்கோ றன்னை**
**வண்மையி னடத்தி னானாங்**
**… … … … … … … … … … …"6**

எனும் வரிகள் உதயணன் பருவ நிலையை அடைந்து நடுநிலையுடன் ஆட்சி புரிந்தான் என்பதை உணர்த்துகின்றன.

**உதயணன் பெற்ற பேறுகள்**

ஒவ்வொருவருக்கும் கல்வி இன்றியமையாததும் அழியாத செல்வமும் ஆகும். ஒரு பிறப்பில் கற்ற கல்வியானது அவனது எழுபிறப்பிற்கும் உதவும். அரச குலத்தில் பிறந்த உதயணன் கல்வியில் சிறந்து விளங்கினான். ஞான வில்லியம் என்ற நூலை கற்றான். மகத நாட்டு மன்னன் தருசகனிடம் கல்வி கற்றுள்ளான். உதயணன் வீரம் மிகுந்தவன். இவனை பிரச்சோதனன் சிறைப்பிடிக்க வருகையில் போரிடுவதும், மகத மன்னன் தருசகனுக்காக கௌசாம்பி நகரைக் காப்பாற்றப் போரிடுவதும், வில்வித்தை கற்ற வல்லவனாகவும் திகழ்வதால் இவனது வீரம் புலப்படுகிறது.

யாழிசையில் சிறந்த உதயணன், காட்டில் வாழும் விலங்குகள் மண்டியிட்டு வணங்கும் வகையில் யாழினை மீட்டும் திறம் கொண்டவன். சேடக முனிவரின் அருளால் தெய்வ யாழினைப் பெற்றான் என்பதை,

**"... ... ... ... ... ... ... ... ...**
**கலைக்கட னீந்திக் கானக்**
**கரிணமும் புள்ளு மற்றுங்**
**கண்டடி வீழுங் கீதப்**
**புரந்தரன் கொடுத்த யாழும்**
**பொறைமுனி யருளிற் பெற்றான்" 7**

எனும் பாடல் வரிகள் விளக்குகின்றன. மேலும் அவனது யாழிசை கேட்டு யானை வணங்கி தன் மேல் ஏற துதிக்கைக் கொடுத்ததை பின்வரும் பாடல் உணர்த்துகின்றது.

**"பையெனக் களிறுங் கேட்டு**
**பணிந்தடி யிறைஞ்சி நின்று**
**கையது கொடுப்ப வேறிக்**
**காளையும் பள்ளி சேர்ந்தான்" 8**

**வாசவதத்தையை காணலும் மணப்பதும்**

பிரச்சோதனனின் மகள் வாசவதத்தை. இவள் துயிலின் போது ஞாயிறு தழுவியதை தந்தையிடம் கூறுகிறாள் முனிவர் பேரழகன் வாய்ப்பான் என பிரச்சோதனனிடம் வாய்மொழிந்தார். வாசவதத்தையும் உதயணனும் சந்திக்கின்றனர். இருவரது கண்கள் நோக்குவதை,

**"நோக்கினாள், நோக்குஎதிர் நோக்குதல், தாக்குஅணங்கு**
**தானைக்கொண் டன்னது உடைத்து" 9**

எனும் குறளுக்கிணங்க மயங்குகிறாள். இருவரது விழிகள் மட்டுமல்ல, நெஞ்சமும் ஒன்றாக கலந்ததை,

**"யாயும் ஞாயும் யார் ஆகியரோ?**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?**
**யானும் நீயும் எவ்வழி அறிதும்?**
**செம்புலப் பெயல் நீர் போல,**
**அன்புடை நெஞ்சம் தாம்கலந்தனவே" 10**

எனும் வரிகளுக்கேற்ப இருவரது மனமும் ஒன்றாக இணைந்தது.

களவு வாழ்வை மேற்கொண்ட உதயணன் தன் காதலியான வாசவதத்தைக்கு யாழை கற்பிக்கின்றான். அவள் எதிரில் அமர்ந்திருக்கிறாள். அவளைப் பார்க்கும் போது,

**"பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?"11**

என்பது போல பேச்சின்றி இருவரும் விழிகளிலேயே இன்பத்தை நுகர்ந்தனர்.

இருவரின் களவொழுக்கம் வாசவதத்தையின் தந்தைக்கு தெரிந்து திருமண ஏற்பாடுகள் நடக்கின்றன. முரசொலி எழும்ப மக்கள் மகிழ்ந்து தங்களது வீட்டின் வாயில்களில் தோரணங்களை நாட்ட திருமணம் சிறப்பாக நடைபெறுகிறது.

**பதுமாபதியின் காதல், களவு, மணம்**

மகத நாட்டு மன்னன் தருசகனின் தங்கை பதுமாபதி. அழகு நிறைந்த இவள் காமவேளை வணங்க வருகிறாள். அங்கு உதயணன் அவளைப் பார்க்க தன் மனைவி வாசவதத்தையே உயிருடன் நேரில் வருகிறாள் என நினைப்பதை,

**“பருவமிக் கிலங்குங் கோதைப்**
**பதுமைதே ரேறி வந்து**
**பொருவில்லா மனையே காணப்**
**புரவலன் கண்டு கந்து**
**மருவும்வா சவதத் தைதான்**
**வந்தன ளென்று ரைப்பத்**
**திருநிகர் மாது கண்டு**
**திகைத்துளங் கவன்று நின்றான்”** 12

எனும் வரிகளில் உதயணன், பதுமாபதியை பார்ப்பதும், பதுமாபதி காமுற்று மனமயக்கம் கொள்வதும் உணரலாகிறது. உதயணின் காதல் மயக்கத்தில் மூழ்கிய பதுமாபதி துன்புறுகிறாள். இருவரும் காமக்கோட்டத்தில் களவுக் கொண்டனர். தருசகன் தனது தங்கை பதுமாபதியை உதயணனுக்கு மணம் செய்து தருவித்தலை,

“… … … … … … … … … …
**மங்கைதங்கை தன்னையே**
**திருநிறைதல் வேள்வியாற்**
**செல்வதற்கே யளித்தனன்.”**13

எனும் பாடல் விளக்குகிறது.

**மானனீகையின் காதலும் திருமணமும்**

பூங்கொடி போன்ற இடையுடையவள் மானனீகை. இனிய மொழிகளைப் பேசும் மானனீகையின் வேல் போன்ற விழிகள் தன்

நெஞ்சை கிழிப்பதாக உதயணன் குறிப்பிட்டுள்ளான். தீப் பட்டு தன் மனம் புண் பட்டிருப்பதாகவும் மானனீகையே அக்காயத்திற்கு மருந்து என்றும் குறிப்பிடுகின்றான். அவள் பந்தடிப்பதைப் பார்க்கின்றான். சிலம்பு, அணிகலன்கள், கை வளையல்களின் ஒலி இனிமையான இசையாக அவனை மயக்கி காமுற வைப்பதை,

**"பாடகச்சி லம்பொலி பண்ணினு மினிதெனச்**
**சூடகத் தொலிநல கரருடைய கீதமே**
**ஆடகம ணித்தொனி யரசுளங் கவர்ந்துடன்**
**கூடகம னத்தினற்கு மரனினிய னாயினன்"** 14

எனும் வரிகள் சுட்டி நிற்கின்றன. இவற்றையெல்லாம் அறிந்த மானனீகை, மன்னர்கள் காதல் பணிப்பெண்களுக்கு சற்றும் பொருந்தாது. ஆதலால் தன் மீதுள்ள காதலை தவிர்க்கச் சொல்கிறாள். ஆனால் உதயணன் காதலை தவிர்க்காமல் அவளை வற்புறுத்தவே மானனீகை இசைகிறாள். இதையறிந்த வாசவதத்தை கோபமடைய, கோசல நாட்டு அரசனின் ஓலையைப் படித்து உண்மையை அறிகிறாள். உதயணன், மானனீகை திருமணத்திற்கு சம்மதிக்கிறாள். மானனீகை, உதயணனை வணங்குவதும், உதயணன் அவளை மணப்பதையும் பின்வருமாறு சித்திரிக்கப்பட்டுள்ளது.

**"துன்னிரு ணீங்கிக் காலை**
**தூமலர் கொண்டு தத்தை**
**மன்னவ னடிவ ணங்க**
**மனமகிழ் வின்றி நின்ற**
**அன்னமென் னடையி னாளை**
**யகமகிழ் குளிரக் கூறி**
**மன்னன்மா னீகை தன்னை**
**மணமிகச் செய்து கொண்டான்"** 15

**விரிசிகையை மணத்தல்**

முன்பொரு காலத்தில் காடு ஒன்றிருந்தது. அக்காட்டில் சோலையில் மலர்கள் மலர்ந்திருந்தன. அம்மலர்களை மாலையாக்கி அணிந்து உள்ளத்தால் நுகர்ந்து பூங்கொத்துப் போன்ற அழகுடையவள் விரிசிகை. இவளை உதயணனுக்கு, வாசவதத்தை, பதுமாபதி, மானனீகை ஆகியோர் திருமணம் செய்விப்பதை,

**“தேவியர் மூவர் கூடத்**
**தேர்மன்னன் சேர்ந்து சென்னாட்**
**காவின்முன் மாலைசூட்டி**
**காரிகை கலந்து விட்ட**
**பூவின்மஞ் சரியைப் போலும்**
**பொற்புநல் விரிசி கையைத்**
**தாவில்சீர் வேள்வி தன்னாற்**
**றரணீசன் மணந்தா னன்றே” 16**

பாடலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. நான்கு மகளிரை மணந்த உதயணன் இனிதாக வாழ்ந்து மகிழ்வடைந்துள்ளது புலனாகின்றது.

**பன்மணம் கொள்ளல்**

நம் சமுதாயத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற நெறி காலந்தொட்டே பின்பற்றப்பட்டு வருகிறது. பன்மணம் என்பது ஒரு ஆண் பல பெண்கணை மணக்கும் பலதார மணமாகும். உதயணகுமார காவியத்தில் உதயணன் எனும் கதைமாந்தர் நான்கு பெண்களை மணந்திருக்கின்றான். இதுபோன்று சீவகசிந்;தாமணி மற்றும் நாககுமார காவியங்களில் ஒருவன் பல பெண்களை மணந்திருப்பதும் சமுதாய மாற்றம் நிகழ்ந்திருப்பதும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. தமிழ் சமுதாயத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கூற்றை,

**“இம்மை மாறி மறுமை ஆயினும்**
**நீ ஆகியர் எம் கணவனை**
**யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே” 17**

எனும் குறுந்தொகை வரிகள் சுட்டி நிற்கின்றன. இவ்வரிகள்வழி பழங்காலத்தில் தமிழர்களிடையே பலதார மணம் இல்லை என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒருவன் பல பெண்களை மணந்திருப்பது வடநாட்டுக் காப்பியங்களில் காணலாகிறது. உதயணகுமார காவியம் பிருகத்கதா எனும் வடநாட்டு சமூக முறையை தழுவி எழுதப்பட்டுள்ளது என்பது புலப்படுகிறது.

**நட்புறவு**

உதயணனும் யூகியும் சிறுவயதிலிருந்தே நட்புறவுக் கொண்டிருந்தனர். கலைகள் பலவற்றைக் கற்றறிந்தனர். நுட்பமான அறிவுடையோர்களாகத் திகழ்ந்தனர். உதயணன், யூகி இருவரும்

அண்மை நாடுகளை போரிட்டு வென்று தங்களுடன் சேர்த்து நல்லாட்சி புரிந்தனர். உதயணன் சிறைப்படுத்தப்படுகின்றான். அவ்வேளையில் யூகி, இறந்துவிட்டதாகக் கூறி நம்பச் செய்கின்றான். பின்பு உதயணனை காணச் செல்வதை,

**"தன்ன கர்பு லம்பவெங்கத்**
**தன்னை யுங்க ரத்தலின்**
**உன்னி வந்து மாற்றரச**
**ரோங்கு நாடு பற்றினர்**
**என்ற றிந்து யூகியு**
**மினிச்சி றையின் மன்னனைச்**
**சென்ற வட்காண் டுமென்று**
**தேய முன்னிச் சென்றனன்."18**

எனும் பாடல் உணர்த்துவதன் மூலம் யூகி மீது உதயணன் கொண்டிருந்த நட்பு அறியத்தக்கது. உதயணன் திறை செலுத்தாததால் பிரச்சோதனன் கோபம் கொண்டான். கல்வி, ஆண்மை, வீரம், யானைகளை அடக்கும் திறன் போன்ற வல்லமைப் படைத்தவன். அவனது படையோடு அவந்தி நாட்டிற்கு கொண்டு வருவது பெரும் செயலாய் இருந்தது. ஆதலால் பிரச்சோதனன் மாய யானைக் கொண்டு உதயணனை சிறைப்படுத்துகின்றான். பகை இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் அவந்தி நாட்டு மக்களை உதயணன் காப்பாற்றியதால் பிரச்சோதனன் பெருமிதமும் நட்பும் கொள்கின்றான். அத்தோடு தனது மகள் வாசவதத்தையையும் மணம் முடித்து தருவதை,

**"மருமக னீயே யென்று**
**மன்னவ னினிமை கூறி**
**வருமுறை நயந்து கொண்டு**
**மகிழ்ந்துட னிருந்த போழ்தில்**
**திருமகள் கனவு கூறிச்**
**செல்வநீ கற்பி யென்னப்**
**பெருவலி யுரைபக் கேட்டுப்**
**பெருமக னுணர்த்த லானான்."19**

எனும் பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

**பரத்தமையரோடு தொடர்பு**

பரத்தமையர் ஒழுக்கம் என்பது மனித வாழ்வோடு ஒன்றியது. அகவாழ்வோடு தொடர்புடையது. பரத்தையர் என்பவள் தனக்கென ஒரு வாழ்க்கை ஒருவரோடு அமைத்துக் கொள்ளாமல் பல ஆண்களோடு குறுகிய காலமோ நெடுங்காலமோ வாழ்பவர். இப்பரத்தையர்கள் ஆண்கள் முன்பாக ஆடியும் பாடியும் அவர்களை மகிழ்விப்பர். மேலும் தனது இளமையையும் அழகையும் ஆடவர்களுக்கு அளித்து இன்பத்தைப் பெறுவதோடு பொருளையும் பெறும் குணமுடையவர்கள். உதயணன் வாசவதத்தையின் பிரிவால் வாடும்போது அவனுக்கு காமநோய் மிகுகிறது. மனமும் உடலும் வேறுபாடு அடைகிறது. முப்பொழுதும் அவளது நினைவால் வாடுகின்றான். உதயணன் தன் நிலையை மற்றவர் அறியும் முன்பாக பரத்தையை அழைத்து வருமாறு வயந்தகனிடம் கூறுகின்றான். வயந்தகனும் ஏற்கனவே உதயணனுக்கு அறிமுகமான நருமதை என்பவள் வீட்டைத் தேடி அடைந்தான். செய்தியறிந்த நருமதை வெளியூர்களுக்குச் செல்ல மறுக்கிறாள். ஆயினும் தாய்க்கிழவி, தாய் உட்பட உறவினர்கள் வயந்தகனுடன் செல்ல அறிவுறுத்தினர். அதன்படி அவள் இசைகிறாள். வயந்தகன் அவளை அழைத்து வருகின்றான். நருமதையோடு இரவு முழுவதும் உதயணன் மகிழ்ந்திருந்து மறுநாள் காலையில் அனுப்புவதை,

**“.... வையத்து**
**வலிதிற் றந்த வால்வளைப ;பணைத்தோள்**
**ஒருமனம் புhந்த நருமதை கேட்ப**
**வேட்கைக் கிளவி வெளிப்படப் பயிற்றிச்**
**சேட்படு குருசில் சேர்தொறும் பொறாஅள்**
**நச்சுயிர்ப் பளைஇய நாகம் போல**
**அச்சுயிர்ப் பளைஇ யமரா நோக்கமொடு**
**சில்லைச் சிறுசொன் மெல்லியன் மிழற்ற**
**அவ்விரு ளடக்கி வைகிருட் போக்கிப்**
**போற்றா மாக்க டூற்றும் பெரும்பழி**
**மேற்கொண் டனனான் மின்னிழை**
**பொருட்டென்” 20**

எனும் வரிகள் விளக்குகின்றன. இதன்வழி உதயணன் பரத்தையரோடு தொடர்பு கொண்டதிருந்தது வெளிப்படுகிறது.

**போர்த்திறம்**

அரசர்கள் எப்போதும் பகைவர்களை வீழ்த்த நினைப்பதுண்டு. பகையரசர்களின் நிலை, எவ்வழியைப் பின்பற்றி செல்கின்றனர் என்பதையெல்லாம் ஒற்றரின் வாயிலாக அறிவதும் உண்டு. உதயணனும் இவ்வியல்பைப் பெற்றிருந்தான். ஒற்றர் குழு தரும் செய்திகளை ஆராயும் குணம் கொண்டவன். தெய்வ யாழை பெற்று, அதுகொண்டு தெய்வ யானையை பெறுகின்றான். அந்த யானை மறையவே காட்டில் யாழை வாசித்து வருகின்றான். அப்போது பிரச்சோதனின் சூழ்ச்சியால் மாய யானை காட்டில் உதயணனை நெருங்கி வர, இவனும் நெருங்குகின்றான். ஆயுதங்களுடன் கூடிய வீரர்கள் அடங்கிய அம்மாய யானையான யந்திரப் பொறி திறந்தது. உதயணன் கம்பீரமாக நிற்க வயந்தகன் உதவியால் வீரர்கள் கொல்லப்பட்டனர். சேனையின் பின்பாக சாலங்காயன் தோல்வியுற்றதை,

**"கரந்தி ருந்த களிற்றினுட் சேனையும்**
**பரந்த முன்வந்த பாங்கில் வளைத்தபின்**
**விரிந்து வத்தவன் வெகுண்டு நூறினான்**
**முரிந்து சேனை முனையின் மடிந்ததே"** 21

எனும் பாடல் உணர்த்துகிறது.

வாசவதத்தையை கைப்பிடித்து களிற்றில் ஏற்றி உதயணன் பாலை நிலத்தில் வருகின்றான். அவ்வேளையில் சவரர், புளிஞர் எனும் வேடர் வகையினர் அம்புகளை மழைப் பொழிவது போல எய்த அவற்றையெல்லாம் உதயணன் முறியடித்தான். அதனை,

**"வந்தவ ரம்பு மாரி**
**வள்ளன்மேற் றூவத் தானும்**
**தந்தனு மேவிச் சாராத்**
**தரத்தினால் விலக்கிப் பின்னும்**
**வெந்திறல் வேடர் வின்னாண்**
**வெந்நுனைப் பகழி வீழ**
**நந்திய சிலைவ ளைத்து**
**நன்பிறை யம்பி னெய்தான்"** 22

எனும் வரிகள் விளம்பியதை அறியலாம். இக்கொள்ளையர்களின் போரில் மறவர்கள் சிலர் இறந்துபட்டனர். இவ்வாறாக உதயணன் கொள்ளையர்களைப் போரிட்டு தோற்கடித்தான். இதுபோன்று பகை அரசனான ஆருணி அரசனுடன் போர் செய்ததை பின்வரும் பாடல் விளக்கி நிற்கும்.

**"விரிந்த வெண்குடை வீழவும்**
**வேந்தர் விண்ணுற வேறவும்**
**பரிந்து பேய்க்கண மாடவும்**
**பலந ரிபறைந் துண்ணவும்**
**முரிந்த முண்டங்க ளாடவும்**
**முரிந்த மாக்களி றுருளவும்**
**வரிந்த வெண்சிலை மன்னவன்**
**வந்த வன்கண்கள் சிவந்தவே" 23**

மேற்காண்பனவற்றிலிருந்து உதயணனின் வீரத்தாலும் போர்த்திறத்தாலும் பகையரசர்கள் படைகள் அழிந்துபட்டன என்பது அறியலாகிறது.

**நரவாகனன் பிறப்பு**

உதயணன் ஆட்சியை சிறப்பாக நடத்தினான். அவனை குடிமக்கள் போற்றி வணங்கினர். அவ்வேளையில் கோப்பெருந்தேவியான வாசவதத்தை கருவுற்றிருந்தாள். வான்வழியாகப் பறந்து பல்வேறு காட்சிகளைக் காண ஆவலுறுகிறாள். வடக்கு திசை நோக்கிச் சென்று இமயமலையைக் கண்டு இரசிக்கின்றனர். கிழக்கே சூரியன் உதிக்கும் அழகை இரசித்துப் பின்பு தெற்கே வீற்றிருக்கும் பொதிகைமலையை கண்டு களித்தனர். சூரியன் மறையும் அழகான காட்சிகளைக் கண்டு களித்தபின் கோசம்பி நகருக்கு வந்ததும் வாசவதத்தைக்கு ஆண்மகவுப் பிறந்ததை,

**"மாதுதன் வயாநோய் தீர்ந்து**
**வளநகர் புக்க பின்பு**
**தீதின்றிக் கோள்க ளெல்லாஞ்**
**சிறந்துநல் வழியை நோக்கப்**
**போதினிற் குமரன் றோன்றப்**
**புரவல னினிய னாகிச்**
**சோதிப்பொன் னறைதி றந்து**

**தூவினன் சனங்கட்**
**கெல்லாம்."24**

எனும் பாடல் சுட்டியுள்ளது. உதயணன் மகிழ்ந்து தன் குடிகளுக்குப் பொன்னை வாரி வழங்குகின்றான். பிறந்த ஆண் மகவுக்கு 'நரவாகனன்' எனப் பெயர் சூட்டி உள்ளம் குளிந்தான். நரவாகனன் குழந்தைப்பருவத்தை எய்துகிறான். இளமைப்பருவத்தில் நாட்டை ஆளுகின்றான்.

**தவக்கோலம்**

அனைத்து வளங்களையும் பெற்ற உதயணகுமாரன் தனது மனைவியர்களோடு வாழ்ந்து வந்தான். முற்பிறவியில் செய்த தவம் இப்பிறவியில் அனைத்து சிறப்புகளையும் பெறச் செய்து இன்பமாக வாழ வழிகாட்டியது என்றான். ஆதலால் இனி அறச்செயலாகிய தவவாழ்வு குறித்து மனைவியர் நால்வரிடம்,

**"தேவியீர்நீர் வேண்டியதென்**
**திருமனை துறந்துபின்**
**மேவுவனற் றவமென்ன**
**மின்னிடைய மாதரும்**
**போவதுபொ ருளெமக்கும்**
**புரவலனே நின்னுடன்**
**தாவில்சீர் விழுத்தவமுந்**
**தாங்குதுமென் றிட்டனர்."25**

எனும் வரிகளில் துறவறம் மேற்கொள்வதைக் கூற அவளது நான்கு தேவியர்கள், தாங்களும் துறவறத்தை ஏற்கின்றோம், அதுவே நன்மையைத் தருவது என்றனர். இவர்களோடு உதயணனின் நான்கு அமைச்சர்களும் தவக்கோலம் மேற்கொண்டனர். உதயணன், தேவியர், அமைச்சர்களுடன் தருமவீரர் எனும் முனிவரைக் கண்டு திருவடிகளை வணங்கினர். நல்ஞானம், நல்ல காட்சி, நல்ல ஒழுக்கம் முதலியவை கற்பிக்கப்படுகின்றன. பின்பு அவர்களது கூந்தல் நீக்கப்பட்டு தவக்கோலம் பூண்டனர். வானுலகில் தேவர்களாகத் தோன்றினர்.

**தொகுப்புரை**

தமிழ்மொழி செழுமையானதும் வளமையானதுமாகும். அதற்கு காப்பியங்கள் அணிகலன்களாகின்றன என்று கூறலாம். ஐஞ்சிறுகாப்பியங்களுள் முதன்மையாகத் திகழ்வது உதயணகுமார காவியம்.

இக்காப்பியத்தின் தலைவன் உதயணகுமாரன் அரசாளுவதும், வாழ்வியல் கூறுகளாக கல்வியறிவு, காதல், வீரம், நட்பு அவன் பேறுகளாக தெய்வ யாழ், தெய்வ யானையைப் பெறுதல், தன் யாழிசையால் யானையை வணங்கச் செய்தல் போன்றவை அமைந்திருப்பது சிறப்புக்குரியது.

உதயணன் காதலில் ஈடுபடுவதும் காமுற்று இருப்பதும், காமத்தை தீர்க்க பரத்தையுடன் புணர்ந்திருத்தலும், பெண்ணின்ப நுகர்ச்சியால் தன்னையே மறந்திருக்கும் நிலையை உடையவன் என்பது உணரலாகிறது.

ஒருவனுக்கு ஒருத்தி என்பது தமிழர் பண்பாடு. உதயணகுமாரன் நான்கு மகளிரை மணந்திருப்பதன்வழி இக்காவியம் வடநாட்டுக்; காப்பியங்களைத்; தழுவி எழுந்தது எனப் புலப்படுகிறது.

உதயணன், போர் செய்வதில் வல்லவன். சவரர், புளிஞர் போன்றோர்களுடனான பல போர்களை செய்து வெற்றி வாகை சூடியுள்ளான். இது காலங்காலமாக மரபுவழியில் செய்யப்பட்டு வந்ததைப் பின்பற்றி செய்யப்படுவது. ஆனால் பிரச்சோதனின் சூழ்ச்சியால் மாய யானைக்குள் வீரர்கள் பதுங்கியிருப்பதும், அவர்களுடனான போரும் சற்று வேறுபட்ட நிலையாக உள்ளது.

பல திறமையுடையவனாக உதயணன், காணப்பட்டாலும் தன் தந்தையாலும், தாய்மாமனுக்கு குழந்தைப்பேறு இல்லாததாலும் ஆட்சிப் பொறுப்பேற்பது குறிக்கத்தகுந்தது.

அரசனின் உற்ற நண்பராகயிருந்தாலும்கூட அமைச்சராவதில்லை. எப்படியாவது அரசனை வீழ்த்தி தான் அரசு ஏற்பதையே குறிக்கோளாகக் கொள்வர். பால்யகால நண்பன் யூகி, உதயணன் காதலில் வயப்பட்ட

வேளையில், தனது அறிவற்றாலாலும் சூழ்ச்சியாலும் நாட்டைக் காப்பாற்றுகின்றான். பால்யகால நண்பன் அமைச்சராகி அரசனாவது நோக்குதற்குரியது.

அரசர்கள் புகழோடு வாழ்ந்து, அது பின்னாளில் நிலைபெற வேண்டும் என்பதற்காக, தவக்கோலம் மேற்கொள்வது மரபுவழியாக இருக்கும் வழக்கமாகும். அம்மரபு வழியே உதயணனும் அரசு வாழ்வை துறந்து நான்கு தேவியர்களுடனும் அமைச்சர்களுடனும் தவக்கோலம் பூண்டது குறிக்கத்தகுந்ததாகும்.

**அடிக்குறிப்புகள்**

1. கு. மகுடீஸ்வரன், சமணக் காப்பியத் தலைவர்கள், ப.62.

2. சு. சண்முகம், பெருங்கதைப் பாத்திரங்கள், ப.55.

3. டாக்டர் கதி. முருகேசன், உதயணகுமார காவியம் மூலமும் உரையும், ப.எii

4. முன்றுறை அரையனார், பழமொழி, பாடல்.7.

5. உதயணகுமார காவியம், பாடல்.23.

6. மேலது, பாடல்.24.

7. மேலது, பாடல்.18.

8. மேலது, பாடல்.19.

9. குறள் - 1082

10.குறுந்தொகை - பாடல்.40

11.கம்பராமாயணம், மிதிலைக்காட்சிப்படலம், பாடல்.37.

12.உதயணகுமார காவியம், பாடல்.157.

13.மேலது, பாடல்.173.

14.மேலது, பாடல்.236.

15.மேலது, பாடல்.239.

ISSN:2582-9599

16.மேலது, பாடல்.240.

17. குறுந்தொகை> பாடல்>49

18 உதயணகுமார காவியம், பாடல். பாடல்.70.

19.மேலது, பாடல்.102.

20.கொங்குவேளிர், பெருங்கதை, 1:35:52,53.

21.உதயணகுமார காவியம், பாடல்.51.

22.மேலது, பாடல்.118.

23.மேலது, பாடல்.181.

24.மேலது, பாடல்.252.

25.மேலது, பாடல்.357.

## துணைநூற் பட்டியல்


1. மகுடீஸ்வரன், முனைவர் கு., சமணக் காப்பியத் தலைவர்கள்
தி பார்க்கர், 293 அகமது வணிக வளாகம்
2-வது தளம், இராயப்பேட்டை நெடுஞ்சாலை
இராயப்பேட்டை
சென்னை - 600 001
டிசம்பர் - 2004.

2. சண்முகசுந்தரம், முனைவர் சு., பெருங்கதைப் பாத்திரங்கள்
காவ்யா வெளியீடு
16, இரண்டாம் குறுக்குத்தெரு
டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024
2005.

3. முருகேசன் டாக்டர் கதி. உதயணகுமார காவியம் மூலமும் உரையும்

சாரதா பதிப்பகம்
ஜி. 4, சாந்தி அடுக்ககம்
3, ஸ்ரீகிருஷ்ணாபுரம் தெரு
இராயப்பேட்டை
**சென்னை** - 600 014
2016.